**தமிழ்நாடு அரசு**

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்**

**சென்னை–600 015.**

**ந.க.எண்.39113/2016/பொது 2.4** **நாள்: 21.12.2016**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தில் காலியாக உள்ள 2 ஈப்பு ஓட்டுநர் காலிப் பணியிடம் இனச் சுழற்சி அடிப்படையில் நேரடி நியமனத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு நிரப்பப்பட உள்ளது.

| வ.எண் | பதவியின் பெயர் | ஊதிய விபரம் | கல்வித் தகுதி | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | ஈப்பு ஓட்டுநர் | 5200–20200+2400 தர ஊ தியம் | 8–ம் வகுப்பு தேர்ச்சி | 2 |

இந்த பணியிடம் 1) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் 2) பிற்படுத்தப்பட்டோர் முன்னுரிமை அற்றவர்களுக்கு (MBC, BC – Non Priority) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வயது வரம்பு மற்றும் தகுதிகள்:**

1. 01.12.2016 அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும், பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர்–32, வயது அல்லது அதற்கும் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.
2. 1988 மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் தகுதிவாய்ந்த அதிகாரியிடம் ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.
3. வாகனம் ஓட்டுவதில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
4. முன்னாள் இராணுவத்தினர்(மிகவும்பிற்படுத்தப்பட்டோர்/ பிற்படுத்தப்பட்டோர் ) 01.12.2016 அன்று 48/53 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தினை வெள்ளைத் தாளில் விண்ணப்பதாரரின் முழு முகவரி, வயது, கல்வித் தகுதி, இனம்/உட்பிரிவு மற்றும் கைபேசி எண் ஆகியவற்றினை தெளிவாக குறிப்பிட்டு எழுதி அனுப்ப வேண்டும்.
2. இதற்கென விண்ணப்ப படிவம் ஏதும் வழங்கப்பட மாட்டாது.
3. கல்விச் சான்று நகல், சாதிச் சான்று நகல், குடியிருப்புச் சான்று நகல், குடும்ப அட்டை நகல் ஆகியவற்றினை விண்ணப்பத்துடன் அனுப்பி வைக்க வேண்டும்.

4. “விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மை என சான்றளிக்கிறேன். தேர்விற்கு முன்போ அல்லது பிறகோ இவ்விபரங்கள் தவறு என அறியவரும் பட்சத்தில் என்மீது தேர்வுக்குழு எடுக்கும் நடவடிக்கைக்கும் கட்டுப்படுகிறேன். மேலும் போட்டித் தேர்வுக்கு தேவையான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளேன் என உறுதி கூறுகிறேன்” என விண்ணப்பத்தின் இறுதியில் தனது கைப்பட எழுதி கையொப்பமிட்டு விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

5. விண்ணப்பங்கள் உரிய இணைப்புகளுடன் 04.01.2017 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், 4வது தளம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை–15 என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கப்பெற வேண்டும்.

6. தாமதமாக காலக் கெடுவிற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

7. தகுதியல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்

8. எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு.

இயக்குநர்